வர்களை தண்டிப்பதற்காக அரசாங்கத்திற்கு ஏதாவது சட்டம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன். அத்தோடு பாம்பு கடிக்க வந்தால் அதனைக் கொன்றுவிட்டால் அதுவும் தண்டனைக் குரியதாக கருதப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டத்தை மீறி பாம்புகளை கொல்பவர்களுக்கு 2 ஆண்டுகள் வரையில் சிறை தண்டனை வழங்க வேண்டும் என்று சட்டத்திலே வகைசெய்யப் பட்டிருக்கிறது.

8. அரசினர் சட்ட முன்வடிவுகள்

(அ) பயிரிடு குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாப்பளித்தல்) சட்ட முன்வடிவு, 1983.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்: ''தமிழ்நாடு 1983-ஆம் ஆண்டு பயிரிடு குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாப்பளித்தல்) சட்டமுன்வடிவினை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.''

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஆ) கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு, 1983.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் : ''தமிழ்நாடு 1983-ஆம் ஆண்டு கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இச் சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.